குவதும் ஆயுதம் ஏந்திப் போராடுகிற சூழ்நிலைகளை உருவாக்கு வதும் நல்லதல்ல. எனவே, இவைகளைப் பெரிது படுத்திக் கொண்டே போகாமல் அனைவரும் அமர்ந்து அந்த மாவட்ட அளவிலே ஒரு நல்ல சூழ்நிலை உருவாவதற்குரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அந்த முயற்சியை யார் மேற் கொள்வது என்ற கேள்வி எழுமேயானால் நானே கூட முதலமைச் சர் என்ற முறையில் கன்னியாகுமரி மாவட்டத்திலே உள்ள எல்லா கட்சிகளையும் அழைத்து வைத்துப் பேசி ஒரு நல்ல முடிவு காண விரும்புகிறேன். அதற்கிடையே இதற்கு உடன்படக் கூடாது என்று அவர்களைத் தூண்டிவிடுகிற சிலர் சென்னையில் பத்திரிகை அலுவலகங்களில் இருக்கிறார்கள். அவர்கள் யார் என்பதும் எனக்கு நன்றாகத் தெரியும். ஆர்.எஸ்.எஸ். ஊடுருவல் தமிழகத்தில் எந்தக் காலத்திலும் நடைபெறாமல் பார்த்துக் கொள்ளும் பொறுப்பை திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏற்கும் என்பதை மாத்திரம் இங்கே உறுதியாக நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இது குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நான் கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச் சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால் இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது.

2. தகவல் கோரல்—தொடர்ச்சி.

(எ) அடையாறு அருணாச்சலபுரத்தில் சுவர் இடிந்து விழுந்ததால் மாண்ட இரண்டு குழந்தைகளின் குடும்பங்களுக்கு உதவி

திரு. என். கணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழைப்பங்காளன் முதல்வர் கலைஞர் அவர்களுடைய கவனத்திற்கு மனிதாபிமானப் பிரச்சினை ஒன்றை நான் கொண்டு வர விரும்புகிறேன். என்னுடைய மயிலாப்பூர் தொகுதிக்கு உட் பட்ட சென்னை அடையாறு அருணாச்சலபுரம் இரண்டாவது தெருவில் ஒரு வீட்டின் பக்கவாட்டுச் சுவர் சுமார் 80 அடி நீளம் உள்ள சுற்றுச்சுவர் சரியாக அஸ்திவாரம் போட்டுக் கட்டப் படாத காரணத்தால் நேற்றையதினம் கீழே விழுந்து அங்கே விளையாடிக்கொண்டிருந்த, நந்தகோபால் என்பவர் மகள் ஜமுனாராணி மற்றும் சந்திரன் என்பவரின் மகள் சித்திரா, நான்கு வயது, இந்த இரண்டு பச்சிளங் குழந்தைகளும் இடிபாடு களில் சிக்கி மாண்டுவிட்டனர். அவர்களின் எதிர்காலத்தைப் பற்றி இன்பக் கனவு கண்டு கொண்டிருந்த அந்த ஏழைப் பெற் றோர்கள் பெரும் அதிர்ச்சிக்கும், துயரத்திற்கும் ஆளாகியிருப்

பதை நேரில் சென்று நான் ஆறுதல் சொன்ன நேரத்தில் காண முடிந்தது. அந்த ஏழைக் குடும்பத்திற்காக தமிழகத்தில் உள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அவர்களின் துயரத்தில் பங்கு கொண்டு அந்தக் குடும்பத்தினருக்கு ஆறுதலாக அரசாங்க ஈட்டுத் தொகை கொடுக்க வேண்டுமென்று தாயுள்ளம் கொண்ட முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களை நான் கேட்டுக்கொள் கிறேன்.

அதேபோல் என்னுடைய தொகுதியில் பல்வேறு கட்டிடங் களில் அடிக்கடி இப்படிப்பட்ட சூழ்நிலை உருவாகிறது. ராஜா அண்ணாமலைபுரத்தில் போலீஸ் ரேடியோ குவார்ட்டர்ஸ் என்று சொல்லப்படுகிற குவார்ட்டர்ஸ் இடிந்து விழக்கூடிய சூழ்நிலை காரணமாக அங்கே இருப்பவர்களை எல்லாம் காலி செய்யக்கூடிய நிலைமை உருவாகி இருக்கின்றது.

மல்லீஸ்வரன்தோட்டம் என்று சொல்லப்படுகிற பகுதியிலும் படிக்கட்டுகளும், டாங்குகளும் இடிந்து விழுந்து விட்டன. ருக்மணி நகர் என்று சொல்லப்படுகிற பகுதியிலேயும் மேலே இருக்கக்கூடிய கூரைகள் இடிந்து விழக்கூடிய சூழ்நிலை ஏற் பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தொடர்புடைய செய்தி களை மட்டும் சொன்னால் நல்லது.

திரு. என். கணபதி : தொடர்புடைய செய்திகள்தான். இந்த மாதிரி நிகழ்ச்சிகள் எதிர்காலத்தில் நடக்காமல் இருக்க, எச்சரிக்கை நடவடிக்கையாக ப்ளான் சாங்ஷன் செய்கின்ற போதே, கட்டடங்கள் கட்டப்படுகிற நேரத்திலே சரியாகக் கண்காணிக்க இந்த அரசு தக்க நடவடிக்கை எடுக்கவேண்டு மென்று கேட்டுக்கொண்டு, சம்பந்தப்பட்ட வீட்டின் சொந்தக் காரார் மேல் கவனக்குறைவாக இருந்து மரணத்தை விளைவித்தார் என்ற அந்தக் குற்றத்திற்காக கிரிமினல் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்தச் செய்தியை முதன் முதலில் போட்ட தினகரன் பத்திரிகைக்கும் நன்றியைக் கூறி, மாண்புமிகு முதல்வர் அவர்களும் உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-00)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கணபதி அவர்கள் இப்போதுதான் இந்தத் தகவலைத் தங்கள் மூலமாக எனக்கு அளித்திருக்கிறார்கள். அஜாக்கிரதையாகக் கட்டப்பட்ட வீட்டின் சுவர் இடிந்து விழுந்த காரணத்தால் விளையாடிக் கொண்டிருந்த இரண்டு பச்சிளங் குழந்தைகள் பரிதாபமாக மாண்டிருக்கிறார்கள்.

அவர்களே சொன்னார்கள். அந்த வீட்டுக்குரியவர்கள் மீது வழக்குப் போடவேண்டுமென்று. மாண்புமிகு உறுப்பினர் அவர்களே, நல்ல வழக்கறிஞர். எனவே, அவரே அது குறித்து வழக்கு தொடுத்து நஷ்ட ஈட்டை அந்த வீட்டுக்காரர்களிடமிருந்து அந்த குழந்தைகளுக்காகப் பெற்றுத் தரலாம்.

அது மாத்திரமல்ல, அவர்கள் பெற்றுத் தருகின்ற நஷ்ட ஈட்டோடு அந்தக் குழந்தைகளை இழந்து தவிக்கின்ற அந்த இரண்டு குடும்பங்களுக்கும் முதல்வர் அவர்களுடைய நிதியிலிருந்து தலா இரண்டாயிரம் ரூபாய் வழங்கப்படும் என்பதை மாத்திரம் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சா, பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடம். பேரவையிலே நேற்றைய தினம் நம் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் பேசும்போது நாங்கள் வெளிநடப்பு....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை, இல்லை. இப்போது நடைபெறுகின்ற அலுவல் தொடர்பாக மட்டும்தான் ஒழுங்குப் பிரச்சினை எழுப்ப முடியுமே தவிர வேறு எழுப்ப முடியாது. வழக்கறிஞராகிய உங்களுக்கு அது நன்றாகத் தெரியும்.

(ஏ) சேரன்மாதேவித் தொகுதியிலுள்ள வறட்சி நிலை குறித்து.

திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்னுடைய தொகுதியின் வறட்சி நிலைமை குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வந்தேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களைக் கேட்டு உண்மையாக இருக்குமானால் கொடுக்கிறேன் என்று சொன்னார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் எனக்கு அனுப்பிய பட்டியலை இப்போது கையிலேயே கொண்டு வந்திருக்கிறேன். உண்மையாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னுடைய அறையிலே வந்து கொடுத்தால் நான் உண்மையாக இருக்குமானால் பரிசீலிக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேரன்மாதேவி தொகுதிக்கு நம்முடைய திரு. பாண்டியன் அவர்கள் நிறையச் செய்திருக்கின்றார்கள். அவருடைய பதவியைப் பயன்படுத்திச் செய்திருக்கிறார் என்பது எனக்குத் தெரியும். அதனால்தான் அவர் ஒருவர் தப்பித்தார் என்பதும் எனக்குத் தெரியும்.